

1964-ல் சுனாமியால் தாக்கப்பட்ட
தனுஷ்கோடி ஆலயம்

*Our Radio & TV Programs* Sri Lanka Radio SW 25,41 Meter on Saturday 5.30P.M
&
Nambikkai TV on Monday & Saturday 7.30 P.M

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
License Number TN/WPP-169/SR/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Apr. 2017

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 17 ஏப்ரல் 2017 கனி 5

**However the Most High does not dwell in temples made with hands - Acts 7:48**



**உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார் — அப்போஸ்தலர் 7:48**

**THE WORD OF CHRIST**

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 49 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 49 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## சென்னையில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்


டிவி,ரேடியோ மற்றும் வானொலி மாத இதழ் நேயர் கூட்டம்


இரண்டாம் ஆண்டு பட்டம் பெறும் WEBS மாணவர்கள்


மீஞ்சூர் கிறிஸ்துவின் சபையில் ஞானஸ்நானம் பெற்ற தம்பதி


World Evangelism Bible School Students


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN
Associate Editor
K.R.K.Ravi Asir


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட், ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 200

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான் என்ற தீர்க்கன் யார்?
2. இயேசுவானவர் வேதபாரகரைப்போல் போதியாமல் எப்படிப்பட்டவராய் போதித்தார்?
3. வட்டிக்குக் கொடுத்து, பொலிசை வாங்கினால், அவன் பிழைப்பானோ?
4. அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி பலவந்தம்பண்ணப்பட்டவன் பெயர் என்ன?
5. அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார் என்ற ராஜா யார்?
6. (இயேசுவை) இவன் யூதருடைய ராஜா என்று, எந்த எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது?
7. ராஜாவைத் தங்கள் பொல்லாப்பினாலும், அதிபதிகளைத் தங்கள் பொய்களினாலும் சந்தோஷப்படுத்துகிறார்கள் அவர்கள் எல்லாரும் எப்படிப்பட்டவர்கள்?
8. இயேசு சேறுண்டாக்கி அவன் கண்களைத் திறந்த நாள் எந்தநாளாயிருந்தது?
9. பெத்தேலைத் தேடாதேயுங்கள், கில்காலிலும் சேராதேயுங்கள், பெயர்செபாவுக்குப் போகாதேயுங்கள் என்று எவர்களுக்கு சொல்லப்பட்டது?
10. தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தவன் யார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...** வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

18

நாள்: 14.04.2017 வெள்ளிகிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: C. பால்ராஜ், சுவிசேஷகர்
கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்
அலகுமலை - 641 665
பொல்லிக்காளி பாளையம் (வழி)
திருப்பூர் மாவட்டம்
தொடர்புக்கு: 8072208446, 9787553581



சிறுவர் பகுதி

# சீமோனே! சீமோனே

*வேதபகுதி: லூாக்கா 21:31-32*



இந்த வார்த்தையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து சொன்னார். பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

சீமோனே, சீமோனே இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் (அதாவது பிசாசு) உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பள்ளியிலே சிலர் முந்தி முந்தி பேசுகிறவர்களை பார்த்து இருப்பீர்கள். இவர்களுக்கு முந்திரிக்கொட்டை என்று பெயர் அதைப்போல பேதுருவும் பன்னிரண்டு சீஷர்களிலே ஒருவராக இருந்தார். ஆகையால்தான் ஆண்டவர் அவரைப்பார்த்து இவ்விதமாக சொன்னார்.

நாமும் சில வேளைகளில் நம்மை நாமே கவனிக்காமல் மற்றவர்களை பார்ப்போம். முதலாவது நம்மை சரிசெய்ய வேண்டும். இல்லையென்றால் பிசாசு கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல நம்மையும் புடைக்க ஆண்டவரிடம் உத்தரவு கேட்டுக்கொள்வான். புடைக்கும்போது நாம் பதரைப் போல இருந்தோமானால் பறந்தே போய்விடுவோம். நல்ல கோதுமை மணிகளைப்போல உறுதியான விசுவாசமுடையவர்களாக இருப்போமானால் புடைக்கும்போது சுளகிலே இருப்போம் அப்படியென்றால் கர்த்தரோடு இருப்போம். ஆகையால் நாம் சரியான பிறகு நம் சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நமக்காக கர்த்தர் வேண்டுதல் செய்யக்கூடியவராக இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்தவராகவும் இருக்கிறார். அதேபோல பேதுருவின் விசுவாசத்தை அறிந்த ஆண்டவர் உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். ஒருவேளை கர்த்தர் வேண்டிக்கொள்ளாதிருந்தால் புடைக்கும்போது பதரைப்போல பேதுரு பறந்தேபோய்இருப்பார். ஆகையால் நீ குணப்படு என்றார். நாமும் முதலாவது குணப்பட்டு பின்பு மற்றவர்களை குணப்படுத்துவோம். அப்படியென்றால் நாம் சரியானபிறகு மற்றவர்களைச் சரிசெய்வோம். செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:** **“உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்” (லூக்.21:19).**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் – 17 ஏப்ரல் –2017 கனி – 5

ஆசிரியருரை

# இருமனமுள்ளவன்

## Double - Minded Man



ஒரே இருதயத்தை தேவனாகிய கர்த்தர் நம் எல்லோருக்கும் உண்டாக்கியிருக்கிறார். சரீரத்தில் இரண்டு இரண்டாக அநேக அவயவங்களை உண்டாக்கி இருந்தபோதும். இருதயத்தை மட்டும் ஒன்றாக உருவாக்கியிருக்கிறார். இருதயம் ஒன்றையே சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே இப்படி உண்டாக்கியிருக்கிறார் என்று கருதுகிறேன். இதை மாற்றி சிந்திக்க முற்படுகிறவர்கள் இருமனமுள்ளவர்களாகவே இருக்க பிரயாசப்படுகிறார்கள். "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" என்று யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.1:8). அவன் தேவனுக்கேற்றவைகளை சிந்திக்காமல் உலகக்காரியங்களை சிந்திக்கிறபடியால் அவன் நிலையற்றவனாயிருக்கிறான். ஆகையால் அவன் இருமனமுள்ளவனாயிருக்கிறான். இருவழிகளில் பணம் சம்பாதித்தால் வீடு ஐசுவரியத்தால் பெருகும் என்பார்கள். ஆனால் அந்த இருவழிகள் எப்படிப்பட்டவழிகள். நேர்மையான வழிகளா? அல்லது மற்றவர்களை ஏமாற்றும் வழிகளா? சாலொமோன் தமது நீதிமொழிகளில் இப்படியாகச் சொல்லுகிறார். "இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியவானாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி" என்கிறார் (நீதி.28:6).

ஆம் ஐசுவரியவான் லாசரு சம்பவத்தில் லாசரு தரித்திரனாயிருந்தான். ஐசுவரியவானுடைய வாசலருகே பிச்சைக்காரனாயிருந்தான். அவனோ மரித்து ஆபிரகாம் மடியில் விடப்பட்டான். ஆனால் ஐசுவரியவானோ மரித்து பாதாளத்தில் அதாவது நரகத்தில் வேதனைப்படக்கூடிய இடத்தில் விடப்பட்டான். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? இருவழிகளில் தவறாக நடந்து ஐசுவரியவான் ஆவதைக்காட்டிலும் கொஞ்சத்திலே உண்மையாய் இருந்துகொண்டு தரித்திரனாக இருந்தாலும் ஒரே மனமுடையவனாக இருப்பதே மேல் அல்லவா! ஆகையால் அன்பு வாசகரே, நீங்கள் இருமனமுள்ளவர்களாக இருக்கப்போகிறீர்களா? அல்லது ஒரே மனதையுடையவர்களாக இருக்கப்போகிறீர்களா? இன்றே தீர்மானம் செய்யுங்கள். ஏனெனில்; "உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்; மாறுபாடான இருவழிகளில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான்" (நீதி.28:18). உத்தமனாய் நடக்கிறவனுக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. இதை

பிதாவாகிய தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். இந்த இரட்சிப்பு நிலையானதாக இருக்கிறது. உலகத்தில் கிடைக்கக்கூடிய ஒரு விடுதலையைப்போல அல்ல இது. இந்த இரட்சிப்பு நித்தியமானதாகவும் நிலையானதாகவும் இருக்கிறது. இவ்வுலகத்திலே மாறுபாடாக நடக்கிறவர்களுக்கோ இந்த இரட்சிப்பு தூரமாக இருக்கும்.

பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை அறிவீர்கள். அவன் ஒருவிதத்தில் இருமனமுள்ளவனாயிருந்தான். ஆகையால் கர்த்தர் கழுதையின் வாயை திறந்து அவனை எச்சரித்தார். அவனோ, "கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனான்" என்று யூதா11-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுடைய எச்சரிப்பைக் கேட்டும் பாலாக் என்ற ராஜாவின் வார்த்தைக்கு செவிகொடுத்து இஸ்ரவேலை சபிக்கும்படியாக மேடைகளில் ஏறினான். பாலாக்கின் பணம் அவனை விரைந்தோடச்செய்தது. இதினாலே தேவனுடைய பார்வையில் குற்றவாளியானான். ஒருமுறை சொல்லியிருக்கிற காரியத்தை கர்த்தர் மாற்றுகிறவரல்ல என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டவைகளாயிருக்கிறது. அவைகளை நாம் மாற்றாமல் அப்படியே ஏற்று கீழ்ப்படிந்து நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அவைகளின்படி நடந்து ஒரே சிந்தையாகவும் ஒரே மனதுடையவர்களாகவும் இருக்கும்போது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

இருமனமுள்ளவர்கள் தங்களுடைய இருதயங்களைப் பரிசுத்தபடுத்த யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறார். "தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" என்கிறார் (யாக்.4:8). அழுக்கு வஸ்திரத்தை துவைத்து அதை வெண்மையாக்கிவிடுகிறோம். நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாக்குவதெப்படி? இயேசுவின் இரத்தத்தை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அது பரிசுத்தமாக்கப்படுகிறது. இருமனமுள்ளவர்களா மாறும்போது அப்படிப்பட்ட இருதயம் மீண்டும் அசுத்தமாகிவிடுகிறது. அதை எப்படி சரிசெய்வது? முதலாவது உங்கள் கைகளைச் சுத்திகரிக்கவேண்டும். கையினாலே என்ன பாவம் செய்தோம் என்று நீங்கள் நினைக்கலாம். கையும், காலும், கண்களும், நாவும், நம்முடைய இருதயமும் பாவஞ்செய்ய தூண்டுபவையாக இருக்கிறது. ஆகையால் உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள், இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள் என்கிறார். இவைகளை நாம் அவ்வப்போது பரிசுத்தமாக்கிக் கொண்டே இருக்கவேண்டும். இல்லையேல் சுத்தம்செய்யாத பாழடைந்த பங்களாவைப்போலாகிவிடும். குறிப்பாக ஒவ்வொரு நாளும் நம்முடைய இருதயத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். தினமும் குளிக்கின்றோம். அதைப்போல நம்முடைய இருதயத்தின் பாவக்கறைகளை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு கழுவுகிறோமா? நாவும் நம்முடைய அவயவங்களில் ஒரு முக்கியமான அவயவமாக இருக்கிறது. இதைக்குறித்து வேதாகமம் சொல்லும்போது; "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது" என்கிறார் (யாக்.3:8-10). இந்த ஆசான் நாவை



# பாவம்
# Sin

- P.Solomon Selvaraj

-சென்ற மாதஇதழின் தொடர்ச்சி

**இதோ வேதம் கூறும் சத்தியம்**

மாற்றான் ஒருவன் நம் உலகத்தின் மீது படை எடுத்து அதைப் பாழ்படுத்திவிட்டான். இந்த மாற்றான் என்பவன் பரலோகிலிருந்து தள்ளப்பட்ட தூதர்களின் தலைவனாகிய சாத்தான். இக்கொடியவனே நன்றாக இருந்த படைப்பை தன் தந்திரத்தினிமித்தம் ஆதி பெற்றோர்களாகிய நம் மூதாதையரான ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றி இவ்வுலகத்தில் பாவத்தையும் இச்சையையும் விதைத்து படைப்பை சீரழித்து பாழ்படுத்திவிட்டான் (ஆதி.3-ம் அதிகாரம்) படைப்பினுள் பாவம் உட்புகுந்தபடியால் வாழும் கடவுளால் வாழவேண்டி படைக்கப்பட்ட மனிதன் வாழமுடியாமல் சாகும் மனிதனானான்.

எனவே, பாவத்தைப் பற்றிய ஒரு முழுமையான அறிவும் தெளிவான உணர்ந்து கொள்ளுதலும் மிகவும் இன்றியமையாதது. பாவம் நம் மீது ஏற்படுத்தும் விளைவுகளை நாம் அறிந்து பாவத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை உணரவேண்டும். எப்படி ஆபத்தான சுனாமி என்று அழைக்கப்படும் ஆழிப் பேரலைகள் நம் கண்முன்னால் பல உயிர்ச் சேதங்களையும், கோடிக்கணக்கான பொருள் இழப்புக்களையும் ஏற்படுத்தி, விளைவுகளை உண்டாக்கியதோ, அதைப்போன்ற பாவத்தின் விளைவையும் அதன் ஆபத்தையும் நாம் உணர்ந்தவர்களாகயிருக்கவேண்டும்.

**பாவம் என்றால் என்ன?**

கிரேக்க நாட்டில், முதல் நூற்றாண்டு காலத்தில் அம்பு எறிதல் தேசிய விளையாட்டாக இருந்தது. அதை ஒரு வீரன் எய்யும்போது அது எங்கே சென்று தாக்கவேண்டும் என்கிற (Target) குறி இருக்கும். சில நேரங்களில் அம்பு எய்யும் வீரர்கள், தங்கள் அம்பு குறிக்கப்பட்ட அந்த குறியை தொடாமல் வேறு திசையில் சென்று விடுமானால் சூழ்நிலைக்கு தள்ளப்படுவார். அவர்கள் இலக்கு தவறும் போது விளையாட்டு மைதானத்தில் உள்ள ஜனங்கள், கிரேக்க மொழியில் அமர்ஷியா, அமர்ஷியா என கேலி செய்துவிடுவார்கள். ஆகவே இந்த அமர்ஷியா என்ற வார்த்தை மிகவும் பிரபலமானது அமர்ஷியா என்றால் குறி தவறுதல் என்று அர்த்தமாகும் (Miss the mark). இந்த குறிதவறுதலை ஆங்கிலத்திலே Sin என்றும் தமிழில் பாவம் என்றும் மொழியாக்கம் செய்திருக்கிறார்கள். எனவே பாவம் என்ற சொல்லுக்கு குறிதவறுதல் என்று பொருளாகும்.

**பாவம் என்றால் இதோ வேதம் கூறும் பதில்.**

1. தேவனுடைய கட்டளைகளுக்கு மனிதன் கீழ்ப்படியாமல் போவதே பாவம்.
2. தேவன் மனிதனுக்கு அளித்த, கற்பனைகளை (கட்டளைகளை) மீறுதல் பாவம் (1யோவா.3:4).
3. அநீதியான யாவும் பாவம் (1யோவா.5:17).
4. நன்மைகளைச் செய்ய நீ அறிந்தவனாயிருந்தும் அதை செய்யாமற்போவது பாவமாகும் (யாக்.4:17 மற்றும் நீதி.3:27)
5. விசுவாசத்தோடு செய்யப்படாத எதுவும் பாவம் (ரோம.14:23)

அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்... அப்படியானார்" (எபி.2:14,15). என்று நாம் வாசிக்கிறோம். இயேசு உண்மையாக மனுஷன் என்று பொருள்படும் வண்ணமாக மாதிரியைக் காண்பிக்கிறவராக சிறந்த மனுஷராக இருந்தார்.

இதற்கு இணையான வேதவாக்கியங்களை வாசித்து விவாதியுங்கள்.

யோவா.1:18, யோவா10:10, ரோம.1:16, எபி.1:1-3.

**விடையளித்து இவ்வினாக்களைக் குறித்து விவாதியுங்கள்:**

1. நீங்களும் உங்கள் நண்பர்களும் எப்போதாவது வேதாகமத்தைக் குறித்து அல்லது மத நம்பிக்கைகளைக் குறித்து விவாதித்தது உண்டா?

2. அவர்கள் ஒரு நபர் எப்படி இரட்சிக்கப்படுகிறார் என்பது பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

3. இரட்சிப்பைக் குறித்து அநேக வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன, ஆனால் தேவன் என்ன சொல்லுகிறார் என்று அறிய நாம் எங்கே செல்கிறோம்?

4. வேதாகமம் எத்தனை பெரிய பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது?

5. இன்றைய மக்களுக்கான தேவனுடைய செய்தி எது?

6. நாம் பழைய ஏற்பாட்டு சட்டத்தின் கீழ் வாழாவிட்டாலும், வேதாகமத்தின் அப்பகுதியினை வாசிப்பது ஏன் நமக்கு முக்கியமானதாயிருக்கிறது? அவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளுகிறோம்?

7. இரட்சிப்பிற்கான தேவனுடைய வல்லமை என்ன? சுவிசேஷம் என்பது என்ன? சுவிசேஷத்தை விளக்குகிறதான வேதவாக்கியங்களை கவனித்து அதைக்குறித்து ஆராய்ந்து அதற்கு நம்முடைய கீழ்ப்படிதலை அர்ப்பணியுங்கள்: 1கொரி.15:1-4; ரோம.6:17, அப்.2:38, ரோம.6:3-6.

8. இரண்டு, பிரதான கற்பனைகள் யாவை?

9. தேவன் தம்மை மனிதருக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார்?

10. இயேசு--------------------------- மற்றும்----------- ஆவார்?

**வகுப்புப் பயிற்சி:**

வகுப்பினை இருபிரிவாகப் பிரித்துக்கொள்ளவும் ஒருபிரிவு கிறிஸ்தவர்களாகவும் மற்றொன்று அவர்களுடைய நண்பனாகவும் இருக்கட்டும். பயிற்சி செய்து வேதவாக்கியங்களை மனித நம்பிக்கைகளுக்கும் எதிராக தேவனுடைய வழிகளுக்கு நேராக ஆராயுங்கள்.

**என் சிநேகிதர்**

1983 — 2017

பல வருடங்களாகத் தேடினேன் தேடினேன்
ஒரு சிநேகிதனை இப்பூவில்
ஒருவனையும் நான் காணவில்லை;
சிநேகிக்க ஒரு காலமுண்டு அப்படியே
பகைக்க ஒரு காலமுண்டு என்பதைப்போல
பகைவர் ஆயினர் நான் சிநேகித்தவர்கள்!
ஏனோ தெரியவில்லை
என்னை ஒருவர் சிநேகிக்கிறார் என்பதைக் கண்டு கொண்டேன் அவர்
அருளிய வேதத்தில்!
எல்லாக் காலங்களிலும் சிநேகிக்கும் அவரை
ஏற்றுக்கொண்டேன் என் சிநேகிதராய்
அன்று முதல் இன்றுவரை அவரே
என் சிநேகிதர்
என் வழிகாட்டி
என் மேய்ப்பர்
என் ஆலோசகர்
என் ஆண்டவர் –என
அறிந்து கொண்டேன் என் ஆத்தும நண்பரை!
அறிவீரா மானிடனே
அவரே உன் ஆண்டவர் என்று!
ஏற்பாயா உன் உள்ளத்தில்
என் சிநேகிதர் ஏசுவை இன்று!
–ஆசிரியர்



அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அதேவேளையில் என் சகோதரரே இப்படியிருக்கலாகாது என்கிறார். ஆக, நாம் செய்யவேண்டியதென்ன? ஒரே நாவாலே துதிக்கவும் சபிக்கவும் கூடாதே. ஆகையால் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த சரீரத்தில் தேவனையும் அவருடைய உபதேசத்தையும் மகிமைப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். தேவன் நமக்கு சரீரத்தில் கொடுத்திருக்கும் அவயவங்கள் ஒவ்வொன்றும் நம்முடைய ஜீவியகாலமெல்லாம் நன்மைசெய்யவும், நற்சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்கவுமே கொடுத்திருக்கிறார். ஆகையால் தேவசித்தத்தை அறிந்து ஒரே மனதுடையவர்களாக இருந்து ஒன்றையே சிந்திக்கவேண்டும்.

மேலும், யாக்கோபு சொல்லுகிறார்; "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" (யாக்.3:11-13). உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக என வேதத்தில் வாசிக்கிறோம். அந்த ஊற்றுக்கண் இரண்டுவிதமான காரியங்களைக் கொடுக்குமா? ஒரே ஊற்று நீர் இரண்டு விதமான தண்ணீரைக் கொடுக்காது. அதைப்போல அந்தந்த மரம் அதினதின் கனியைக் கொடுக்கும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்போமானால் தேவனுக்கேற்ற காரியங்களை செய்யவேண்டும். அவர் விரும்புகிற கனிகளை கர்த்தரில் நிலைத்திருந்து கொடுக்கவேண்டும். ஆகையால் நாம் நிதானமுள்ளவர்களாக இருந்துகொண்டு நம்முடைய கிரியைகள் மூலமாக நலமான காரியங்களை வெளிப்படுத்தவேண்டும். அப்படிச்செய்வீர்களா? அப்படிச்செய்ய ஒவ்வொருநாளும் முயற்சி எடுங்கள் அப்பொழுது உங்கள் முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிப்பார். இஸ்ரவேலின் தேவனை அறிந்த அநேகர் கர்த்தருடைய ஆலோசனைக்கு விரோதமாக நடந்ததாக நாம் பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள்" (ஓசி.4:12). ஜீவனுள்ளதேவனை தன் சொந்த தேவனாகப் பெற்ற இந்த இஸ்ரவேலர் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கும்படியாக சென்றார்கள். இன்றும் குறிசொல்லுகிறவர்களை நாடுகிறவர்களையும் வீணான விக்கிரகங்களிடத்தில் சென்று சீட்டுப்போட்டு அதை எடுத்து இதுதான் நமக்கு சொல்லும் ஆலோசனை என்று தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டு திரிவதைப்போல இஸ்ரவேலர் இரண்டு நினைவுகளால் மாறிப்போனார்கள். இதனால் ஓசியா தீர்க்கன் சொல்லும்போது சோரமார்க்கம் போனார்கள் என்கிறார். சோரமார்க்கம் என்றால் விபசாரமார்க்கம் என காண்கிறோம். தேவனுடைய நியமத்தை மீறி செய்யும் செயல் எல்லாம் விபசாரமாக இருக்கிறது.

மேலும் யாக்கோபு சொல்லும்போது; "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" என்கிறார் (யாக்.1:6,7). இருமனமுள்ளவன் சந்தேகப்படுகிறவனாயிருக்கிறான்.

ஆகையால் அவனுடைய மனம் இதுவா அல்லது அதுவா என்ற சந்தேகத்தோடு அலைகிறது. இப்படிப்பட்ட அநேகரை நம்முடைய வாழ்க்கையில் பார்க்கிறோம். இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் கொடுத்த ஒரே இருதயத்தில் ஒரே சிந்தையோடு இருக்கும்போது கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஒத்தாசை வரும். இப்படி இருமனமுள்ளவர்களுக்கு காரிருள் வைக்கப்பட்டுள்ளதாக யூதாவில் படிக்கிறோம். "இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 12,13). ஒரு இடத்தில் நிலைத்திராமல் இங்கும் அங்கும் அலைவார்கள். அப்படிப்பட்டவர்கள் இருமனமுள்ளவர்களாவே இருக்கிறார்கள். இன்னும் சரியானதை தெரிந்துகொள்ளாமல் சந்தேகப்படுகிறவர்களாகவும், கடல் அலைகளாகவும், மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறதாக வேதாகமம் வெளிப்படுத்துகிறது. காரிருள் என்று சொல்லும்போது கடுகளவும் அதில் வெளிச்சத்தை நாம் காணமுடியாது. பொதுவாக அமாவாசை அன்று சற்றுநேரம் மின் சப்பளை இல்லையென்றால் நாம் என்ன பாடுபடுகிறோம். நம்முடைய வீட்டில் உள்ள குழந்தைகள் அழ ஆரம்பித்துவிடுகிறது. தட்டு தடுமாறுகிறோம். சில பாத்திரங்களை தள்ளிவிடுகிறோம். என்ன காரணம்? வெளிச்சம் இல்லை. ஆகையால் தடுமாறுகிறோம். நித்தியமான காரிருள் இப்படியிருக்குமானால் நம்முடைய நிலைமை என்னவாகும்? சற்று சிந்தித்து, ஒரு மனமுள்ளவர்களாக மாறுங்கள். "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" (நீதி.28:26). தன் இருதயத்தை நம்பி கெட்டுப்போகிற கோடிக்கணக்கான மக்களை நாம் காண்கிறோம். அப்பொழுதே சொன்னாங்க நான் தான் கேட்காம தப்பு பண்ணிட்டேன் என்று புலம்புவார்கள். இதைத்தான் தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன் என வேதம் சொல்லுகிறது. நம்முடைய இருதயத்தை ஆண்டு நம்மை இரட்சிக்கும் கர்த்தரிடம் முழுஇருதயத்தையும் முழுசிந்தையையும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். எலிசாவின் வார்த்தையை நம்பாத பிரதானி எலிசாவின் வார்த்தைப்படியே இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் சமாரியாவின் ஒலிமுக வாசலிலே விற்றது அதை கண்களினாலே பார்த்து அதை சாப்பிடாமல் ஜனங்கள் அவனை நெருக்கி மிதித்ததினால் செத்துப்போனான் என்று 2இரா.7-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சந்தேகப்படுகிற ஒவ்வொருவனும் இப்படியே இருக்கிறான். உங்களுடைய இருதயத்தில் சந்தேகப்படாமல், ஒரே மனதுடையவர்களாக கர்த்தருடைய வார்த்தையை நம்பி ஏற்றுக்கொள்ளுங்கள்.

**பரத்திலிருந்து இறங்கி வராத ஞானம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?**

"இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" என்கிறார் யாக்கோபு (யாக்.3;15). அநேகர் இருமனமுள்ளவர்களாக கெட்டுப்போகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம். லௌகிக ஞானமுள்ளவர்களாக இருந்துகொண்டு தங்களைத் தாங்களே



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends

*-TVOTI*

**- சொன்ற மாத இதழின் தொடர்ச்சி**

**நாம் இதை எப்படி பிரயோகிக்கிறோம்?**

தேவன் வேதாகமத்தின் மூலம் பேசுகிறார். வேதாகமம் அவருடைய குமாரனாகிய இயேசுவைக் குறித்து நமக்குச் சொல்லுகிறது. "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1:1-2).

இயேசு எருசலேம் அமைந்துள்ள இஸ்ரவேல் நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த உண்மையான ஒரு மனுஷராவார். இயேசு நமக்கு ஒரு செழுமையான வாழ்வினைக் கொடுப்பதற்கு வந்தார். அவர், "... நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் (யோவா.10:10).

இயேசு நம்மில் அன்பு கூருகிறார், நாம் அவரிடத்தில் அன்புகூர அவர் விரும்புகிறார் மேலும் நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர வேண்டுமெனவும் விரும்புகிறார். அவர், "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" என்றார் (யோவா.15:15). இவ்வாறாக இயேசு தம்முடைய ஜீவனையே நமக்காகக் கொடுத்தார். அவர் தேவனிடத்திலும் பிறரிடத்திலும் நாம் அன்புகூரவேண்டுமென நமக்குப் போதித்தார். "இயேசு அவனை நோக்கி, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே" என்றார் (மத்.22:37-39).

தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவின் மூலம் தம்மை வெளிப்படுத்தினார். அப்போஸ்தலனாகிய யோவான், "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" (யோவா.1:18) என்று எழுதியுள்ளார்.

இயேசு தேவன் யார் என்பதை நமக்குச் சொல்லுகிறார், ஆனால் அவரது வாழ்க்கை போதனைகள் மற்றும் மாதிரியின் மூலம், அவர் தேவன், நாம் அவருடைய கிரியையாயிருக்கிறோம் என்பதையும் வலியுறுத்திச் சொல்லுகிறார். இயேசுவே புதிய ஆதாம். தாழ்மைக்கான புதிய தன்மை நிறைந்தவர். அப்போஸ்தலனாகிய பவுல், "அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1கொரி.15:45) என்றான். இயேசு தேவனாகவும் மனுஷராகவும் இருக்கிறார்.

இயேசுவைக் குறித்து, 'குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (எபி.1:8) என்று எழுதப்பட்டுள்ளது. அதே புத்தகத்தில் "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு

# கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?
## 1கொரிந்தியர் 1:3

-G.King Solomon

இக்கேள்வியே முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் உள்ள கிறிஸ்தவர்களிடம் கேட்ட கேள்வியாகும். இப்படி கேட்க காரணம் என்ன? கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்கள் தங்களை பல பிரிவினை குழுக்களாக அழைத்துக் கொண்டிருந்தார்கள். இது சபையின் ஒருமைப்பாட்டினை சீர் குலைத்து சகோதரர்களுக்குள்ளே வாக்குவாதங்களை உண்டுபண்ணும் பாவத்தின் செயலாயிருந்தது. இச்செய்தியை குலேவேயாளின் வீட்டாரால் பவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது, பவுல் மிகுந்த மன வேதனையுடன் இக்கேள்வியினை எழுப்பினார். இன்று கிறிஸ்துவின் சபையை தவிர (இன்று உள்ளதுபோல்) வேறு பிரிவினை சபைகள் ஸ்தாபிக்கப்படவில்லை. ஆகையால் இக்கேள்வியை பிரிவு சபையாரிடம் கேட்கப்பட்ட கேள்வி அல்ல. அப்படியானால், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரே சபையாரிடத்தில் கேட்கப்பட்ட கேள்வியாகும். அன்று ஒரே சபையில் பல பிரிவுகள் இருந்ததுபோல், இன்றும் இதே நிலை தொடர்கிறதே....?

இன்று நம்முடைய சூழ்நிலை எப்படியிருக்கிறது? நாம் நமக்குள்ளே பிரிந்திருக்கிறோமோ? இச் செயல் சரியானதா? அன்று கொரிந்து பட்டணத்தின் கிறிஸ்தவர்கள் நான் பவுலை சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவை சேர்ந்தவனென்றும்.... கூறியதுபோல இன்று நான் இன்னாரைச் சேர்ந்தவன், நீ அவனைச் சேர்ந்தவன் என்று கூறிக் கொள்ளும் அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோமே? இது சரியானதா? இச்செயலை வேதம் அனுமதிக்கிறதா? நாம் எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும் (யோவா.17:21) என்று ஜெபித்த நமது ஆண்டவர் இச்செயலுக்காக மகிழ்ச்சியாயிருப்பாரா? நமக்கு வழிகாட்டிகளாயிருந்த, முன்னோடிகளாயிருந்த மூத்த ஊழியர்களிடமே இந்த பிரச்சனைகள் இருப்பது மிகவும் வேதனையான காரியம். அப்படியானால் நாம் என்ன செய்யமுடியும் என்று நீங்கள் கேட்பது என் செவியில் விழுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் புத்திமதிகளை பார்ப்போமாக...

1. சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன் (ரோம.16:17).

2. சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல், ஏக மனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்திருயிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (1கொரி.1:10).

கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா என்று நான் உங்களைப் பார்த்து கேட்டால் உங்களின் பதில் நிச்சயமாக இல்லை என்றுதானே இருக்கும். அப்படியானால், நமக்குள்ளே ஏன் பிரிந்திருக்கவேண்டும்? கலாத்தியர் 5:20-ல் பிரிவினை என்ற செயல் பாவ பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. சகோதரருக்குள் பிரிவினையை யார் உண்டுபண்ணினாலும் அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு விரோதிகள் என்றும், அவர்களை விட்டு விலக வேண்டுமென்றும் அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு புத்தி சொல்லுகிறார். எனவே, நாம் சிந்திப்போம், சீர்பொருந்துவோம். தேவ ஞானத்தோடு செயல்படுவோமாக! தேவ கிருபை உங்களோடு இருப்பதாக ஆமென்!



ஏமாற்றிக்கொள்வது. தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்தும் கொடுக்காமல் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி தேவனுடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்துவது. இப்படிப்பட்டவைகள் பேய்த்தனத்துக்கடுத்ததாயிருக்கிறது. பிசாசு, தேவனை விசுவாசிப்பான் ஆனால் கீழ்ப்படியமாட்டான். அதைப்போல அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் ஆனால் அதன்படி நடக்க தங்களை ஒப்புக்கொடுக்கமாட்டார்கள். தொடர்ந்து இரு வழிகளிலே நடப்பார்கள். அதன் முடிவு மரணம். அன்பான சகோதரனே, சகோதரியே, உங்களுடைய இருதயத்தை தேவனுக்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**நடப்புச் செய்திகள்**

- **"அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவை, அரசு ஏற்க வாய்ப்பில்லை" என, மத்திய நிதியமைச்சரும், பா.ஜ., மூத்த தலைவருமான அருண் ஜெட்லி கூறியுள்ளார்.**
- **யூ டியூபில் நேரலை வசதியும் உருவாக்கப்பட்டுள்ளது**
- **நாட்டில் செயல்பட்டு வரும், 206 சிறப்பு பொருளாதார மண்டலங்களில் தமிழகத்தில் தான், மிக அதிகமாக 36 மண்டலங்கள் உள்ளன.**

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

தெரிந்து கொள்வோம்

## துணுக்குகள்

K.R.K.Ravi Asir, Associate Editor

## நெப்போலியன்

**▶ பாரீஸ் நகர புதுமை:**

பொதுவாக ஓர் இடத்தில் நான்கு அல்லது ஐந்துவீதிகள் தான் சந்திக்கும். ஆனால் உலகிலேயே பாரீஸ் நகரில் தான் ஒரே இடத்தில் பத்து தெருக்களுக்கு மேல் சந்திப்பது போல் அமைந்துள்ளது. இப்படி தெருக்களை அழகாக திட்டமிட்டு அமைத்தது இன்றைய ஆட்சியாளர்கள் அல்ல. நெப்போலியன்!



தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041



## நாம் ஏன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறோம்.

## *Why We Call on The Name of the Lord*

J.C.Choate




கர்த்தருடைய நாமத்தில் தொழுதுகொள்வது பற்றி வேதவாக்கியங்கள் அதிகமான நேரங்களில் பேசுகிறது. அவைகளில் சிலவற்றை கவனிப்போம். நீண்டகாலத்திற்கு முன், “அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத்தரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும்; அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான். கர்த்தர் சொன்னபடி சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர் களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்” (யோவான்.2:28-32) என யோவேல், தீர்க்கதரிசனம் உரைத்தார்.

அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் அங்கே கூடியிருந்தவர்கள் பிரமித்து எவ்வாறு இவர்கள் இப்படி பேசமுடிகிறது என்று சொல்லி பல்வேறு தீர்மானங்களுக்குள்ளானார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள். பிறகு, “பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று. அவர்களை நோக்கி உரத்த சத்தமாய்; யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள் நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள் என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழப் பூமியிலே இரத்தம் அக்கினி புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்” (அப். 2:14-21) என வாசிக்கிறோம்.

நீண்ட நாட்களுக்கு முன் யோவேல் அறிவித்த தீர்க்கத்தரிசனத்திலும் எருசலேம்



அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப். 2:47). (சபை என்ற வார்த்தையின் அர்த்தம் யாதெனில் திரளானவர்களிடம் இருந்து ஒரு விசேஷமான நோக்கத்திற்காக தனியே அழைக்கப்பட்ட ஜனங்களின் குழு என்பதாகும்). சபை என்பதன் விளக்கம் நம்முடைய ஊழியத்தின் இலக்கை கிறிஸ்துவுக்கான நம்முடைய ஊழியத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த குழுவானது ஒரு குடும்பம் என்றும் அழைக்கப்படுகிறது "இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய...." (எபே. 3:14). இந்த நாமம் - கிறிஸ்தவன் - நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிற நெருக்கமான உறவையும், நம்முடைய பிதாவாகிய தேவனோடு உள்ள உறவையும் இது சுட்டிக்காட்டுகிறது.

இன்று தேவன் உலகத்தை காண்கிறபடியே அவருடைய திட்டமானது மாறாமல் இருக்கிறது. அவருடைய குடும்பம் கிறிஸ்துவுக்குள் உலகத்தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டதாய் இருந்து அவரிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்கு கீழ்ப்படிகிறவர்களால் உருவாக்கப்பட்டதாய் இருக்கிறது. இப்படியான உலகத்தின் ஜனத்தொகையானது இரண்டு பிரிவாக மாத்திரம் பிரிக்கப்பட்டிருக்கிறது: தேவனுடைய குடும்பம், மற்றும் அவருடைய குடும்பத்துக்கு புறம்பே இருக்கிறவர்கள். புதிய ஏற்பாட்டின் எல்லாபக்கங்களிலும் எவர் ஒருவரும் ஒரு ஆவிக்குரிய குடும்பம் அல்லது சபை அல்லது இராஜ்யம் என்பதற்கு கூடுதலாக வாசிக்க முடியாது, ஒன்றுக்கு மேல் இருந்ததாக எப்பொழுதுமே கருதப்படவில்லை, மேலும் தேவனுடைய பார்வையில் சபையானது ஒன்றுக்கு மேல் ஒருபோதும் இருந்ததில்லை.

அநேக மனுஷர்கள் வேதாகமத்தின் தெளிவான போதனைகளை அசட்டை செய்து, தங்களுடைய சொந்த கருத்துக்களையும், உபதேசங்களையும் உருவாக்கி, தேவனுடைய உண்மையான திட்டத்தை பரியாசம் செய்து, வேதவாக்கியங்களுக்கு எதிராக பல உபதேசங்களை போதிக்கிற நூற்றுக் கணக்கான வித்தியாசப்பட்ட சபைகளை தொடங்கியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவைகளை "சபைகள்" என்று அழைத்துக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் தேவனை பின்பற்றுவதாக வாதம் செய்கிறார்கள், இன்னும் கிறிஸ்துவையும், வேதாகமத்தையும் பின்பற்றுவதாக சொல்லிக் கொள்கிறார்கள். ஏனென்றால் உலகத்தில் ஜனங்களுக்கு தேவனுடைய சபையின் அருமையையும், தூய்மையையும் காண்பதென்பது கடினமாக இருக்கிறது. கெடுதியான மார்க்க அமைப்புகள் எங்கும் பரவலாக காணப்படுகின்றன. ஆகையால் அவைகள் திரளான ஜனங்களை முற்றிலுமாக குழப்பிக் கொண்டு இருக்கின்றன என்பது பரவலாக அறியப்பட்டகாரியமாய் இருக்கிறது.

ஆனால் நாம் ஒவ்வொரு உபதேசத்தின் கருத்தையும் தேடி நிரூபிப்பதில் இதுவரை ஜாக்கிரதையாக இருந்திருக்கிறோம்.

நாம் கண்டறிந்திருக்கிற தேவன் ஒருவரே தேவன் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். வேறு எவர் ஒவருவம் அவருக்கு இணையானவர் அல்ல.

தேவனுடைய புத்தகத்தின் உள்ளான நிரூபணங்கள் கேள்விக்கு இடமின்றி இருப்பதினால், இது ஒன்றே புஸ்தகம் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

நாம் நம்முடைய இரட்சிப்புக்காக தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் மாத்திரமே திரும்பவேண்டும், ஏனென்றால் தேவத்துவத்திற்கான நிரூபணங்கள் மறுதலிக்கப்பட முடியாது.

தேவனுடைய குடும்பம் மற்றும், தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகத்தில் ஜீவிப்பதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கிறபடியால், அது நிரூபிக்கப்பட்ட சத்தியமாகவும் இருக்கிறபடியால், நாம் ஏன் அதைவிட குறைவாக கீழிறங்கி செல்லவேண்டும்?

Contact: 94435 58041
JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW

பெண்கள் பகுதி

## தேவனுடைய திட்டம் வெளிப்பட்டது

## God`s Plan Revealed

*-Betty*




நாம் தேவன், அவருடைய புஸ்தகம், தேவத்துவத்தில் ஒருவராயிருக்கிற வார்த்தை என்னப்பட்டவரின் பிறப்பின் மூலமாக உலகத்தை மீட்கும் தேவனுடைய திட்டம் ஆகிய பாடங்களை பற்றி படித்திருக்கிறோம். நாம் புரிந்து கொள்ள வேண்டிய அடுத்த முக்கியமான காரியம் என்னவென்றால் நமக்காக இயேசு அடைந்த மரணத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு நன்மையடைய முடியும் என்பதாகும்.

மனுஷன் தன்னுடைய பாவங்களை நிவர்த்தி செய்ய வழிதேட வேண்டியது எழுதப்பட்ட காரியங்களில் அத்தியாவசியமான ஒன்றாக இருக் கிறது. உண்மையான மார்க்கத்துக்கு எந்த அளவு அந்நியமாக இருந்தாலும் பரவாயில்லை, உண்மையிலே அதை பின்பற்றுகிறவர்கள் தங்களுடைய மீறுதல்களுக்காக தேவனிடத்தில் சமரசம் செய்து கொள்ள முயற்சிக்கிறார்கள். ஜனங்களில் சிலர் மன்னிப்பை நற்கிரியைகளின் மூலமாகவும், சிலர் மன்னிப்பை நற்கிரியைகளின் மூலமாகவும், சிலர் தங்களை வருத்திக் கொள்வதன் மூலமாகவும், சிலர்தங்களுடைய சரீர தேவைகள் மற்றும் ஆசைகளை மறுதலிப்பதன் மூலமாகவும் சிலர் இன்னும் தங்களை அழிப்பதன் மூலமாகவும், பாவமன்னிப்பை சம்பாதித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். ஆனால் மனுஷனாக வெறுமனே அவன் தனக்கு தானே இரட்சகராக இருக்க முடியாது. அவன் தன்னுடைய பாவத்துக்காக சொந்ததீர்வை காணவும் முடியாது. "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23).

இதை உணர்ந்து கொண்டால், நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாது, தேவன் நம்மை எவ்வாறு இரட்சிக்க வேண்டும் என்று அவருக்கு சொல்லவும் முடியாது. நாம் தேவனுடைய வழிநடத்துதல்களுக்காக அவரை நோக்கிப்பார்க்க வேண்டும். அதனால் இயேசு நமக்காக சிந்திய இரத்தத்தின் மூலமாக நன்மையை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

### தேவனுடைய குடும்பம்

உலகம் உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த ஒரு காலத்திலே தேவன் தம்மைப் பின்பற்றுகிற நீதிமான்கள் யாவரும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே குடும்பமாக்கப்பட தேவன் திட்டமிட்டார் "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே...." (எபே.1:4) அவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று தேவன் திட்டமிட்டார். "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2தீமோ.1:9)

அவர்கள் நித்திய ஜீவனை குறித்த நம்பிக்கை உடையவர்களாயிருந்து தம்மோடு கூட இருப்பார்கள் என்பதையும் "பொய்யுரையாத தேவன் ஆதிகால முதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப் பற்றி தேவபக்திக் கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும், விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி...." (தீத்து 1:3) தேவன் திட்டமிட்டார்.

இந்த நீதிமான்களாகிய குழு ஒரு இராஜ்யம் என்று அழைக்கப்பட்டது (மத்.13) நாம் நம்முடைய இராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

"இது சபை என்று அழைக்கப்பட்டது" தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர்



நகரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் அதனுடைய நிறைவேறுதலிலும் இது கிறிஸ்துவினுடைய மரணத்தோடும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலோடும இரட்சிப்பு வருதலோடும் இது செய்யப்பட வேண்டியிருந்தது என்பது தெளிவாகிறது. இவைகளெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்த அந்தக் கடைசி நாட்களில் நடைபெற்றது. எபிரெய எழுத்தர் கடைசிநாட்களில் தேவன் தம்முடைய குமாரன் மூலம் திருவுளம் பற்றினார் (எபி.2:1,2) என்று கூறினார். மேலும் இந்நாட்களில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும்படி தம்முடைய வார்த்தையின் மூலம் அவர் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். இது குறித்து பவுல் பேசுகையில் ''நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை மனுஷனால் கற்றதுமில்லை இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்'' (கலா.1:12) என பிரசங்கித்தார். இது குறித்தும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும் கண்டிருந்தது பற்றியும் இந்தத் தீர்க்கத்தரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; காலம் சமீபமாயிருக்கிறது'' (வெளி 1:3) என்கிறார்.

இவ்வாறாக அப்போஸ்தலர் 2-ல் அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபிறகு அவர்கள் கிறிஸ்துவின் வருகை, தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி அவர் செய்த அற்புதங்கள் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மேலும் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆளுகை செய்ய பிதாவின் வலது பாரிசத்தில் உட்காரும்படிக்கு எழுந்தருளியது குறித்தும் பிரசங்கித்தார்கள் எனச் சொல்லும் வேதவாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த காரியங்களைக் குறித்து கேள்விப்பட்டபோது மூவாயிரம் பேர் இருதயத்தில் குத்தப்பட்டு தாங்கள் என்ன செய்ய வேண்டுமென அறிய விரும்பினார்கள். வேதவாக்கியம் ''பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தரை வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்.2:38-42) எனத் தொடருகிறது.

இப்பொழுது நாம் பல காரியங்களைக் குறித்து இங்கே கவனிப்போம். முதலாவதாக பேதுரு, கர்த்தரால் அழைக்கப்பட்ட ஜனங்கள் என்ற குறிப்பை உருவாக்குகிறார். எவ்வாறு அவர் அதை செய்கிறார். பவுல் தெசலோனிக்கேயா பட்டணத்துக் கிறிஸ்தவர்களை ''நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார் (2தெச.2:14) என்று சொன்னார். வேறு வார்த்தையில், பவுல் பிரசங்கித்திருந்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அந்த சுவிசேஷம் என்ன? ரோமர் 10:15ல் இது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மேலும்

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பு ஆகும்" (1கொரி.15:1-4). இன்னுமதிகமாக ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு அவன் சந்திக்கவேண்டிய சுவிசேஷ நிபந்தனைகள் இருந்தன.

அந்த நிபந்தனைகளில் ஒன்று ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்தல், மற்றொன்று ஒருவன் தன் பாவங்களுக்காக மனந்திரும்புதல், கடைசியாக ஒருவன் தன்னுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுத்தல் போன்றவையாகும். அப்போஸ்தலர் 2ல் இவையெல்லாம் பிரசங்கிக்கப்பட்டது. அதாவது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப்பற்றி அப்போஸ்தலர் பிரசங்கித்தார்கள். மேலும் மூவாயிரம் பேர் விசுவாசிகளான போது அவர்கள் தாங்கள் என்னசெய்யவேண்டுமென்பதை அறிய விரும்பினார்கள் விசுவாசிகளான அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென போதிக்கப்பட்டார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் கர்த்தர் அவர்களை தமக்கு கீழ்ப்படியும்படி அழைத்தார். இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி அந்த மூவாயிரம் பேர் கர்த்தருடைய அழைப்புக்குப் பதிலளித்து கீழ்ப்படிந்தார்கள். அதன்பிறகு கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார்.

இரண்டாவதாக, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற அனைவரும் மீட்கப்படுவார்கள் அல்லது இரட்சிக்கப்படுவார்கள். அப்போது அந்த நாள் வருமென்று யோவேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பெந்தெகொஸ்தே நாள் வந்த போது அந்நாளிலே அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றனர்.

அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்குக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பதின் அர்த்தம் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் அவருடைய இரட்சிப்பிற்காகக் கேட்பது என்று அர்த்தம் என கூறியிருக்கின்றனர். வேறொரு வார்த்தையில் அவர்கள் ஜெபத்துடன் சம்பந்தப்படுத்தி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்கின்றனர். ஆனால் இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் குறிப்பிடப்பட்டுள்ளதாக எங்கே எழுதப்பட்டுள்ளது? உண்மையாகவே கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்ட பிற்பாடு அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்ட பின் அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளாக மாறின பின் அவர்கள் தாங்கள் என்ன செய்யவேண்டுமென அறியவிரும்பினார்கள். பேதுரு அவர்கள் மனந்திரும்பி அவர்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர்களுக்குப் போதித்தார். வேதவாக்கியம், மூவாயிரம்பேர் இவ்வாறு செய்தார்கள், கர்த்தர் இரட்சிக்கப்பட்டவர்களை தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார் எனத் தொடர்ந்து கூறுகிறது. ஆனபடியினால் இந்த விஷயத்தில் நாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் என பொருள்படுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். இதை விளக்குவதற்கு இன்னொரு விதம் அதாவது ஒருவன் அல்லது அநேகர் அவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் அவர்களை இரட்சிப்பார். (மாற்.16:15,16) ஆனபடியினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதனால் ஒருவன் அவரை நோக்கி தன்னை இரட்சிக்கும்படி அவருடைய வாக்குத்தத்தை நிறைவேற்றும்படி வேண்டிக்கொள்ள தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தரை நோக்கித் தொழுதுகொள்ளுகிறான்.



உக்கிராணக்காரன் ஒரு வீடு முழுவதற்கும் அல்லது ஒரு பெரும் சொத்திற்கு மேலாளராக இருப்பவர் என்பதைக்குறிக்கும்.
1. தாலந்துகளின் உவமை (மத்.14:25-30).
2. (பவுண்டுகளைப்) பற்றிய உவமை (லூக்.19:12-27)
எங்கே உக்கிராண ஊழியமுண்டோ அங்கே சொந்தங்கொண்டாடுதலும் உண்டு.
1. நம்முடைய வாழ்க்கையே தேவனிடமிருந்து பெற்ற ஈவு.
ஏனெனில், அவருக்குள் நாம் பிழைக்கிறோம். அசைகிறேம் இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள் (அப்.17:28).
பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தி நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார் (சங்.24:1,2).

**உக்கிராணக்காரரின் கடமைகள்**

1. மற்றவர்களின் பொருள்களை உக்கிராணக்காரனிடம் நம்பி ஒப்படைப்பார்கள்.
2. முதலாளியினுடைய பொருட்களை பாதுகாத்து மேலும் முதலாளியை ஐசுவரியவானாக்குவது உக்கிராணக்காரனின் கடமை.
3. உக்கிராணக்காரர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் மிக புத்திசாலிகளாகவோ வெற்றியுள்ளவர்களாகவோ இருக்கவேண்டும். உடன் வேலையாட்களுக்கு திருப்தியாக இருக்கத் தேவையில்லை. நம்மை எது உண்மையற்றவர்களாக்கும்?
வேலைக்காரர்களாய் நடந்து கொள்வதை விட்டு எஜாமானைப் போல் நடிப்பது.
தேவனை பிரியப்படுத்துவதை விட மனிதனைப் பிரியப்படுத்துவது. சோம்பலுள்ளவர்களாயிருப்பது.
எஜமானின் சொத்துக்களை தவறாக பயன்படுத்துவது
நாம் நம்முடைய காலத்தில் நாம் உக்கிராணக்காரர்கள் (எபே.5:15,16).
ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளப்பாருங்கள்.
1. நம்முடைய நேரத்தை நாம் தேவனுக்கென்று பயன்படுத்தவேண்டும்.
நீ உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும் எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருடங்கள் சேராததற்கு முன்னும் (பிர.12:1).
2. மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலே நாடி நம்முடைய நேரத்தை செலவிடவேண்டும்.
3. நாம் நம்முடைய சரீரத் தேவைக்காகவும் தேவனுக்காகவும் கொடுக்க வேண்டும். வேட்டையாடுவதற்காகவோ அல்லது மீன்பிடிப்பதற்காகவோ தன் வேலையை விடுபவனை மூடன் என்போம். மற்ற காரணங்களுக்காக கற்பிப்பதற்காக தேவனுடைய வேலையை விட்டு விடுபவனை என்ன சொல்லலாம்?
எவ்வளவு நேரத்தை நாம் தேவனுக்கு சேவை செய்வதிலும் நம்முடைய ஆவிக்குரிய இலக்கை அடைவதிலும் செலவிடுகிறோம்?
1. நம்மெல்லோருக்கும் தேவனுக்கு சேவை செய்வதிலும் நம்முடைய ஆவிக்குரிய இலக்கை அடைவதற்கு பாடுபடவும் பொறுப்பு உண்டு.
2. சிலர் ஞாயிறு காலை வேதவகுப்புக்குச் செல்வதே இல்லை.
3. சிலர் ஒருபோதும் ஞாயிற்றுகிழமை இரவு அல்லது புதன் கிழமை இரவு தொழுகைக்குச் செல்வதில்லை.

பாடம் - 22

**லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டது**

**அப்போஸ்தலர் 16:12-15** *- Jerry Bates*

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




1. அவளுக்கு திருமணமாகியிருந்தால் அவள் அநேகமாக தனியாக அவள் வியாபாரத்தில் இருந்திருக்க மாட்டாள். அல்லது தனியாக வியாபாரத்தினிமித்தம் இவ்வளவு பிரயாணங்களைச் செய்திருக்க மாட்டாள்.

2. அவளுக்குத் திருமணமாகியிருந்ததானால் வீட்டின் தலைவர் என்று அழைக்கப்பட்டிருக்கமாட்டாள். வீட்டாரனைவரோடும் கூட தன்னையும் சேர்த்து என் வீடு என்கிறாள். அந்த வயதில் அது அங்குள்ள முறையாக இருந்திருக்காது. இந்த சந்தர்ப்பத்தில் அவளுடைய வீட்ட ார் என்பது அவளிடம் அடிமையாக இருந்து வேலைக்காரிகள் அல்லது விடுவிக்கப்பட்டு அங்கு வேலை செய்யும் பெண்கள் அடங்கிய கூட்டமாக இருந்திருக்கலாம்.

**நிறைவாக**

1. சின்னச் சின்ன துவக்கங்களின் மகிமையை இந்த சம்பவம் நமக்குச் சொல்லுகிறது. பின்நாளில் பவுலுக்கு மிகவும் உதவி செய்கிற ஒரு சபையாக பிலிப்பிய சபை விசுவாசமுள்ள சபையாக இருந்தது.

2. ஆசியாவில் தன் வார்த்தைகளைக் கேட்ட திரளான கூட்டத்தை விட்டு ஒரு ஆற்றோரத்தில் கூடி வருகிற ஒரு சிறு கூட்ட மக்களுக்காக வந்தார்.

3. ஒரு விதி முறையாக மக்கள் சிறிய துவக்கங்களின் மதிப்பைப் பாராட்டுவதில்லை.

பெஞ்சமின் பிராங்களின் மின்சாரத்தை கண்டு பிடித்தபோது இதனால் என்ன பயன் என்று ஏளனமாகப் பேசினார்கள். அதற்கு பிராங்களின் ஒரு குழந்தையினால் என்ன பயன்? அவன் ஒரு பெரிய மனிதனாவான்.

4. தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பெண்களைக் குறைத்து மதிப்பிடக்கூடாது.

தியத்தீராவில் சபையை ஸ்தாபித்தது அநேகமாக லீதியாளாயிருக்கலாம்.

இன்றைக்கு நிற்கிற அநேக சபைகள் விசுவாசமுள்ள பெண்களுடைய பங்களிப்பால் நிற்கின்றன.

**பாடம் 23**

**பன்றிவால் மதம்**

1.பிராங்களின் கேம்ப் என்பவர் ஒரு பத்திரியையில் பன்றிவால்மதம் என்றொரு கட்டுரை எழுதினார். நியூ ஹெப்ரைட்ச் என்ற ஊரின் மக்கள் பன்றியை தின்று விட்டு அதன் வாலை அவர்களின் புறமதத்தெய்வத்துக்கு படைப்பார்கள்.

2. இதே நடைமுறையின் இந்த உணர்வு பல கிறிஸ்தவர்களிடம் இன்று காணப்படுகிறது. நாம் ஒரு புறமத விக்கிரகத்தை வணங்குவதில்லை. ஆனால் அவர்களுடைய பன்றிவால் மதத்தைக் கைக்கொள்ளுகிறோம். பன்றியை நாம் தின்றுவிட்டு கடவுளுக்கு வாலைப் படைக்கிறோம்.

1. நாம் அனைவரும் தேவனுடைய உக்கிராணக்காரார்களாயிருக்கிறோம் (1கொரி.4:1-4; 1பேது.4:10) அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவர் சொன்னார், உக்கிராண ஊழியம் என்பது ஒரு குறுகிய சந்து. மக்கள் அதில் புகும்போது வெறுப்படைகிறார்கள். சுயநல மிக்க மனித இனத்தின் உள்ளுணர்வுகளை இது விவரிக்கிறது.



மூன்றாவதாக, கர்த்தர் மாம்சமான யாவரும் மேலும் தம்முடைய ஆவியை ஊற்றும்போது அந்தநாள் வருமென தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டது. அவர் அந்த வாக்குத்தத்தைக் காக்கும்படி நீடித்திருந்தார் என்று நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன். பெந்தெகொஸ்தே நாளில் அவர் தம்முடைய ஆவியை ஊற்றினார் அல்லது அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்தினார். மேலும் அவர்கள் மூலம் உலகம் முழுவதும் அவர்களுடைய பிரசங்கத்தினால் ஆசீர்வதிக்கப்படும், மேலும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி கர்த்தருடைய வார்த்தை வேதபுத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது. அவர்களுடைய பிரசங்கத்தின் விளைவினால் கீழ்ப்படிந்த அனைவரும் இரட்சிக்கப்பட்டதுமல்லாமல் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டது. இது அந்த பெந்தெகொஸ்தே நாளில் இருந்தவர்களுக்கு மட்டுமல்ல அவர்களுடைய குமார குமாரத்திகளுக்கும் அல்லது வருங்கால சந்ததியினருக்கும் மேலும் தூரமாயிருந்தவர்களுக்கும் அதாவது புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் யூதர்களைப் போல் புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள் என்பதை நிரூபிக்கும்படியாக கொர்நேலியும் அவர் வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். அப்போஸ்தலர்களும் கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றதோடுங்கூட அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளைத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் வைக்க அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டார்கள். மற்ற அனைவரும் பரிசுத்த ஆவியின் சாதரண அளவினைப் பெற்றார்கள் அல்லது பரிசுத்த ஆவியினால் அற்புதம் செய்ய முடியாத அளவினைப் பெற்றார்கள் மேலும் அது நம்முடைய நாட்கள் வரைக்கும் தொடருகிறதாயிருக்கிறது. இவ்வாறாக கர்த்தர் இந்தத்தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றி தம்முடைய வார்த்தையை ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிலைத்திருக்கச் செய்திருக்கிறார்கள்.

இன்னொரு சமயத்தில் பவுல் ரோமருக்கு இதைப்பற்றி கூறியது என்ன? ''இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே என்னவென்றால்; கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்னும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை எல்லாருக்கும் **கர்த்தரானவர்** தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் **கர்த்தருடைய** நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா, **கர்த்தாவே** எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன்

யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர்.10:8-17) என எழுதினார்.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்ற வசனத்தை இந்த எழுத்தர் மீண்டும் ஒப்பிட்டுச் சொல்வதை தயவுசெய்து இந்த வேதவாக்கியத்தை வாசித்து கவனியுங்கள். இங்கே எது சம்பந்தப்பட்டுள்ளது? இந்த பகுதியிலிருந்து தேவனுடைய வார்த்தை கண்டிப்பாக பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பதை பார்க்கிறோம். ஒருவன் இதைக் கேள்விப்பட்டு, இதை விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அத்தோடு மனந்திரும்புதல் பற்றி இங்கே விசேஷமாகக் குறிப்பிடபடவில்லை என்ற போதிலும் இங்கு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதும் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பதும் விசேஷ மான பகுதியாக இருக்கிறது அப்போஸ்தலர் நபடிகளில் கூறப்பட்டுள்ள மனந்திரும்பலுக்கான பட்டியலோடு இதைப் பின்பற்ற வேண்டியுள்ளது, மேலும் இரட்சிக்கப்பட செய்ய வேண்டியவற்றைப் பற்றி வேதவாக்கியத்தின் வேறுபல பகுதிகளும் குறிப்பிடுகிறது. ஆனால் குறிப்பு என்னவென்றால், ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிகையில், தன்னை இரட்சிக்கும்படி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மீண்டும் அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறான், நிச்சயமாகவே கர்த்தர் ஒரு போதும் கைவிடார். பேதுரு "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்கிறார்" (IIபேது. 3:9).

நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதிருக்கிறீர்களா? இல்லை, நாங்கள் முக்கியமாக ஜெபத்தைக் குறித்து இங்கே பேசிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கிறோம். நீங்கள் அவருடைய சித்தத்தின்படி உங்களுடைய கீழ்ப்படிதல் மூலம் அவரைத் தொழுது கொண்டால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில்சேர்த்துக் கொள்வதின் மூலம் உங்களுக்குப் பதிலளிப்பார். இரட்சிக்கப்படும்படி வேறு வழியே கிடையாது.

## பொது அறிவுச் சோதனை

1. நெம்புகோல் தத்துவத்தை உருவாக்கியவர் யார்?
   அ) ஆர்க்கிமிடிஸ் ஆ) கெல்வின் இ) கிரகாம்பெல்
2. கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் திட்டம் நமது நாட்டில் முதன் முதலாக எங்கு தொடங்கப்பட்டது?
   அ) குஜராத் ஆ) மும்பை இ) லட்சத்தீவில்
3. ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற காலண்டர் முறையை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள்?
   அ) எகிப்தியர்கள் ஆ) சீனர்கள் இ) இந்தியர்கள்
4. கம்ப்யூட்டரில் உள்ள ஜிப்கள் எதனால் செய்யப்பட்டது.
   அ) குரோமியம் ஆ) வெள்ளி இ) சிலிகான்
5. இந்தியாவிற்கு அதிக வருவாய் தரும் பொதுத்துறை எது? அ) தொலைப்பேசிதுறை ஆ) அனல் மின்சாரநிலையம் இ) ரயில்வேதுறை

**விடைகள்:**
1.ஆர்க்கிமிடிஸ் 2. குஜராத் 3. எகிப்தியர்கள் 4. சிலிகான் 5. ரயில்வேதுறை



## ஆசிரியர் கடிதம்....

**இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழை தாங்கள் தொடர்ந்து பெற்றுவருவது குறித்து மிக்க நன்றி சொல்லுகிறோம். உங்களுடைய கருத்துக்களை வரவேற்கிறோம். தாங்கள் மாத இதழ் மூலமாக தெரிந்துகொண்ட சத்தியங்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவனுடைய சித்தத்தின்படியாக நடக்கிற சபைகள் உருவாகவேண்டுமென்பதே எங்களது நோக்கமாக இருக்கிறது. பரிசுத்த வேதாகம சத்தியங்களை சொல்லுகிற ஊழியர்கள் எழும்பவேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனங்களை அவருடைய வேத சத்தியங்களின்படி நடத்திக்கொண்டுவருகிறார். ஆதிமுதல் தம்முடைய வார்த்தைகளின் மூலமாக பேசிவருகிறார். இன்று அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக பேசிவருகிறார். அந்த போதனைகள் அடங்கிய புதிய ஏற்பாட்டின் சத்தியங்களுக்கு நீங்கள் செவி கொடுத்து, கிறிஸ்துவுக்குள் தேவன் வைத்துள்ள உன்னதமான ஆசீர்வாதங்களைப் பெற்று பரலோக பாக்கியத்தைப் பெற ஆயத்தமாகுங்கள். நாம் சத்தியத்திற்காக பொய்சொல்லவேண்டிய அவசியமில்லை. பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்படியாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். எனவே உங்களை கர்த்தருடைய வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.**

**பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும் என்ற வசனத்தின்படி உங்களை வழி நடத்துவார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.**

**அன்புடன்,**
**ஆசிரியர்**

**கிறிஸ்துவின் வசன மாத இதழ்** தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பிப்பெற்றுக்கொள்ளுங்கள்.



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202 S.INDIA



### ஜெபியுங்கள்

- ▶▶ சென்னை ஊழியங்களுக்காக...
- ▶▶ புதிய ஆத்துமாக்களுக்காக...
- ▶▶ விசுவாசக்குடும்பங்களுக்காக...
- ▶▶ வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக...
- ▶▶ உலக சமாதானத்திற்காக...
- ▶▶ வேதாகம பள்ளிக்காக...
- ▶▶ குமுளி, கூடலூர் ஊழியங்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**
**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**